பக்கங்கள் 17+5

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | புரட்டாதி 02 புதன்கிழமை 18.09.2024 | அதிர்வு 48

## இரு வாக்காளர்களுக்காக தனி வாக்களிப்பு நிலையம்

(பழுவூரான்)

சனியன்று ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு வாக்காளர்களுக்காக ஒரு வாக்களிப்பு நிலையம் அமைக்கப் பட்டுள்ளது. 04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# இன்றுடன் ஒய்கிறது பிரசாரம்!



## கடைசிக் கூட்டங்கள் நடக்கின்றன

ஜனாதிபதி தேர்தலுக்கான தேர்தல் பிரசாரப் போர் இன்று (புதன்கிழமை) நள்ளிரவுடன் நிறைவடைகிறது.

வாக்களிப்பு தினம் வரையான மௌன காலத்தில் வேட்பாளர்கள் மற்றும் அவர்களது ஆதரவாளர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபடுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் சட்டத்துக்கு முரணாக செயற்படுபவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார். 04



## புலமைப் பரிசில் பரீட்சை: பெற்றோர் ஆர்ப்பாட்டம்!

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாம் தாளில் இருந்து மூன்று வினாக்களை நீக்கி இறுதி புள்ளிகளை கணக்கிடும் பரீட்சை திணைக்களத்தின் தீர்மானத்திற்குக் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இன்று பெற்றோர் பரீட்சை திணைக்களத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமையுடன், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை இரத்துச் செய்யுமாறும் கோரியுள்ளனர். 04

## அநுரவைக் குழப்பிய புறா!

சம்மாந்துறை தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்கவை புறா ஒன்றின் மூலம் பதற்றமடைய வைத்த இருவர் எச்சரிக்கை செய்யப்பட்டு 04



## தேர்தல் தொடர்பாக 4,737 முறைப்பாடுகள்

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் 156 புதிய முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளமையோடு, மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 4,737 ஆக அதிகரித்துள்ளது.

ஜுலை 31 முதல் செப்டம்பர் 17 வரையிலான காலகட்டத்தில் மொத்தம் 4,737 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன எனத் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. 04



# மயிலந்தனை - மாதவனை பிரச்சினையைத் தீர்ப்பேன்

## கல்லடிக் கூட்டத்தில் சஜித் பிரேமதாஸ உறுதிமொழி



( வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஜனாதிபதி செயலணியை ஸ்தாபிப்பேன். அத்துடன் நீண்ட காலமாக இழுத்தடிக்கப்பட்டு வரும் மயிலந்தனை மாதவனை மேய்ச்சல் தரைப்பிரச்சினையை நான் ஜனாதிபதியாக வந்தவுடன் தீர்த்து வைப்பேன்.

– இவ்வாறு மட்டக்களப்பு கல்லடி சிவானந்த மைதானத்தில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் பிரசாரப்பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ உறுதியளித்தார் .

இந்தக் கூட்டம் மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் சோ. கணேசமூர்த்தி தலைமையில் கல்லடி சிவானந்தா மைதானத்தில் நடைபெற்றது.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பட்டிப்பளை பிரதேச தலைவரும் முன்னாள் தவிசாளரும் அதிபருமான சிவ.அகிலேஸ்வரன் உள்ளிட்ட கட்சி அமைப்பாளர்களும் அதிக் கலந்து கொண்டனர்.

அங்கு அவர் மேலும் பேசுகையில் –

இதுவரை முடிவுறுத்தப்படாத வீட்டுத் திட்டங்களை நான் வந்தவுடன் முடித்துத் தருவேன். அதேபோன்று ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதற்கான ஏற்பாடு செய்வேன். விவசாயிகளுக்கு தரமான உரத்தை ஐயாயிரம் ரூபாவுக்குப் பெற்று தருவேன். அத்துடன் விவசாயம், கடற்றொழில் நவீனமயமாக்கப்படும் என்றார்.

கூட்டத்தில் முஸ்லிம் தலைவர்கள் ரவூப் ஹக்கீம் றிஷாட் பதியுதீன் அமீரலி உள்ளிட்ட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.







# வட மாகாணத்தில் அதிகூடிய தேர்தல் சுவரொட்டிகளை அகற்றிய வவுனியா பொலிஸார் தொடர்ந்தும் களத்தில்!

**(கே.வசந்தன்)**

வடமாகாணத்தில் அதி கூடிய தேர்தல் சுவரொட்டிகளை வவுனியா பொலிஸார் அகற்றியுள்ளமையுடன், தொடர்ந்தும் தேர்தல் சுவரொட்டிகளை அகற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டும் வருகின்றன.

வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயக்கொடி தலைமையில் விசேட பொலிஸ் குழுவினர் இன்றும் தேர்தல் சுவரொட்டிகளை அகற்றும் செயற்பாட்டை முன்னெடுத்திருந்தனர்.

வவுனியா நகரம், குருமன்காடு, திருநாவற்குளம், யாழ்வீதி, தாண்டிக்குளம், நகரப்பகுதி என்பவற்றில் வலம் வந்த பொலிஸார் அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்த தேர்தல் சுவரொட்டிகளை அகற்றினர்.

தேர்தல் சுவரொட்டிகளை காட்சிப்படுத்த தேர்தல் திணைக்களம் கட்டுப்பாடுகளை விதித்துள்ளதுடன். இன்று நள்ளிரவுடன் தேர்தல் பரப்புரை நடைவடிக்கைளுகம் நிறைவடையும் நிலையில் பொலிஸார் இந்தச் செயற்பாட்டை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது, 9000 வரையிலான தேர்தல் சுவரொட்டிகள் அகற்றப்பட்டுள்ளன எனவும், வடமாதகாணத்தில் வவுனியாவிலேயே அதிக சுவரொட்டிகள் அகற்றபட்டுள்ளன எனவும் வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.









# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**அநுரவை...**

பொலிஸாரினால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தேசிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்டத்திற்கான சம்மாந்துறை தொகுதியில் தேர்தல் பிரச்சார கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றிருந்தது.

இதன் போது அதிகளவான மக்கள் மத்தியில் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்க உரையாற்றி கொண்டிருந்தார்.

அவர் உரையாற்றி கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் மேடையை அண்மித்த வானத்தில் சிவப்பு நிற மின்னொளியுடன் மர்மப் பொருள் ஒன்று நகர்ந்து வந்துள்ளது.

கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்த தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அநுரகுமார திஸாநாயக்க உடனடியாக உசாரடைந்தார். தனது பாதுகாப்பு அதிகாரிகளின் ஆலோசனைக்கமைய பாதுகாப்பிற்காக மேடையில் இருந்து சிறிது நேரம் அவர் அகற்றப்பட்டார்.

எனினும் பின்னர் கூட்டம் தொடர்ச்சியாக நடைபெற்று முடிவடைந்தது. பின்னர் சம்பவம் தொடர்பில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன் போது கூட்டம் நடைபெற்ற பகுதியில் இருந்து LED LIGHT பொருத்திய 'புறா' பறந்து சென்றதை விசாரணை ஊடாக அவர்கள் அறிந்தனர். அப்பகுதியில் புறா வளர்ப்பில் ஈடுபடும் 18 மற்றும் 19 வயது மதிக்கத்தக்க இரு இளைஞர்களை திங்கட்கிழமை கைது செய்து விசாரணை செய்தனர்.

இதன் போது கைதானவர்கள் சமூக ஊடகங்களில் காணொளியைப் பதிவு செய்வதற்காக இரவு வேளையில் புறாவின் காலில் ஒரு வகையான மின் குமிழினை பொருத்தி அதனைத் தினமும் பறக்க விடுவதுண்டு எனத் தமது வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளனர்.

கைதான இருவரையும் சம்மாந்துறை பொலிஸார் எச்சரிக்கை செய்து விடுதலை செய்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞன் ஒருவரின் தந்தையார் ஓய்வு பெற்ற முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

---

**இன்றுடன்...**

பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸாநாயக்க, நாமல் ராஜபக்ஷ, திலித் ஜயவீர, நுவன் போபகே ஆகியோர் தலைநகரில் மாபெரும் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தை இன்று நடத்துகின்றனர்.

இதனால் கொழும்பு நகரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு, விசேட போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

சுயேச்சை வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் கொழும்பு கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொஸ்கஸ் சந்தியில் இன்று பிற்பகல் 2 மணி முதல் நடைபெறுகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் மருதானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பஞ்சிகாவத்தை வீதி டவர் மண்டபத்துக்கு முன்பாக இன்று பிற்பகல்2 மணிக்குத் தொடங்கியது.

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்கவின் தேர்தல் பிரசாரக் கூட்டம் மிரிஹான பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுகேகொட ஆனந்த சமரகோன் மைதானத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து இடம்பெறுகின்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவின் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் பிலியந்தல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சோமவீர சந்திரசிறி மைதானத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்குத் தொடங்கியது.

சர்வஜன சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீரவின் இறுதி தேர்தல் பிரச்சாரக் கூட்டமும் இன்று பிற்பகல் 2 மணிக்கு கொட்டாவ பிரதான பஸ் நிலையத்தில் தொடங்கியது.

மக்கள் போராட்டம் முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் நுவன் போபகேவின் தேர்தல் பிரசாரக் கூட்டம் கிரிபத்கொட பகுதியில் இன்று பிற்பகல் 3 மணி முதல் நடைபெறுகின்றது.

---

**தேர்தல் தொடர்பாக...**

மொத்த புகார்களில், தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ மையத்துக்கு 1438, தேர்தல் புகார்கள் மேலாண்மைக்கான மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ பிரிவிற்கு 3299 புகார்கள் வந்துள்ளன.

இவற்றில் வன்முறைச் சம்பவங்கள் ஆக 31 என்பது குறிப்பிடத்தக்கது.

---

**இரு வாக்காளர்களுக்கு...**

மாவட்டத்தில் இத்தேர்தலில் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ள 449,606 பேர் வாக்களிப்பதற்காக 442 வாக்களிப்பு நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.




கடந்த தேர்தல்களின் போது மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்கு பிரதேச செயலக நிர்வாக எல்லைக்குட்பட்ட மாந்தீவு தொழுநோய் வைத்திய சாலையில் தொடர்ச்சியாக சிகிச்சை பெற்று வந்த 2 நோயாளர்களுக்காக மாந்தீவிலேயே விசேட வாக்களிப்பு நிலையம் நிறுவப்பட்டது.

தற்சமயம் அந்த இரண்டு நோயாளர்களும் மாந்தீவு வைத்தியசாலையில் இல்லாதமையினால் இத் தேர்தலில் அவர்கள் இருவரும் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பத்தினை தேர்தல்கள் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

இவர்கள் இருவருக்கும் மட்டக்களப்பு புதூர் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் மண்டப இல - 3 இல் வாக்களிப்பதற்கான விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவர்கள் இருவருக்குமாக விசேடமாக மேற்கொள்ளப்படவுள்ள இவ் வாக்களிப்பு நிலையத்திற்கு வருகை தரும் பட்சத்தில் தமது வாக்குகளைப் பதிவு செய்யலாம் எனவும் பொதுவான வாக்கெடுப்பு நிலையத்தில் பின்பற்றப்படும் சகல நடைமுறைகளும் இங்கு பின்பற்றப்படவுள்ளது எனவும் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எம்.பீ.எம்.சுபியான் ஊடகங்களுக்கு கருக்கு தெரிவிக்கையில் கூறினார்.

---

**புலமைப் பரிசில்...**

எவ்வாறாயினும் போராட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர்கள் சிலர், பரீட்சை திணைக்களத்திற்குள் சென்று கடிதம் ஒன்றை வழங்குவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

பெற்றோர்கள் தொடர்ந்தும் போராட்டம் நடத்தி வருகின்றனர் எனவும், பொலிஸாரும், கலகத் தடுப்புப் பிரிவினரும் அந்த இடத்திற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர் எனவும் இன்று மதியம் தெரிவிக்கப்பட்டது.

2024, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அதில் 323,879 பரீட்சார்த்திகள் தோற்றினர்.

அலவ்வ பிரதேசத்தில் உள்ள ஆசிரியர் ஒருவர் புலமைப்பரிசில் பரீட்சையின் முதல் தாளில் உள்ள சில வினாக்களுக்கு நிகரான வினாக்கள் கொண்ட யூகத் தாள் ஒன்றை பரீட்சைக்கு முன்னர் வெளியிட்டார் எனக் குற்றம் சுமத்தப்பட்டது.

இது தொடர்பான சம்பவம் குறித்து, பல தரப்பில் இருந்து முறைப்பாடுகள் வந்த பின்னணியில், பரீட்சை திணைக்களத்தின் அதிகாரிகள் துரித விசாரணை நடத்தினர்.

இதன்படி வினாத்தாள் தயாரித்த நிபுணர்கள் குழுவின் இணக்கப்பாட்டுடன் தொடர்புடைய மூன்று வினாக்களை நீக்கி இறுதி புள்ளிகளை வழங்க பரீட்சை திணைக்களம் நேற்றுத் தீர்மானித்துள்ளது.

# தமிழ்ப் பொது வேட்பாளர் விடயம் என்பது கூட்டு முயற்சி அல்ல; அது கூட்டுக் களவு!

## அது மாய மான் என்று முன்னாள் மூத்த போராளி ராகவன் காட்டம்



அறகலய போராட்டத்தின் பின்னர் தென்னிலங்கையில் இருந்து வெளி வரும் இனவாதக் கருத்துக்கள் குறைந் துள்ள நிலையில் தமிழ்ப் பொது வேட்பா ளரின் பின்னணியில் இருப்பவர்களே இனவாதத்தை கக்குகின்றனர் எனக் குற்றஞ்சாட்டிய முன்னாள் மூத்த போராளி ராகவன் தமிழ் பொது வேட் பாளர் என்பது கூட்டு முயற்சி அல்ல அது கூட்டுக் களவு என்றார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்ஒ பொது வேட்பாளர் தரப் பைச் சேர்ந்தவர்கள் குறுகிய நோக்கில் இனவாதத்தைப் பேசி தமது எதிர்கால அரசியலுக்கு திட்டமிடுகின்றனர்.

இவர்களது செயற்பாடுகளால் தெற்கில் குறைந்திருக்கும் இனவாதத் திற்கு உரம் போட்டுள்ளனர். தமிழ் பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டுள்ளார்.

இந்தியா உதவும், சர்வதேசம் வரப்போகுது, இதனால் தமிழீழம் வரப்போகிறது என சொல்லி, அது தெற்கில் பூதாகரமாகக் காட்டப்படும்.

எனவே தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிப்பது என்பது தொடர்பில் சிந் தித்து செயற்பட வேண்டும். ஆனால் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற மாய மானுக்கு வாக்களிப்பது எதிர்காலத் தில் எமது தமிழ் மக்களின் அரசியல் பொருளாதார இருப்பை பாதிக்கும்.

தெற்கில் தமிழர்களுக்கு உச்ச பட்ச உரிமையை வழங்கும் வகையில் இம்முறை ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய சோசலிசக் கட்சியின் சிறீ துங்க ஜயசூரியவும் மக்கள் போராட்ட முன்னணியின் நுவான் போபகேவும் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளி யிட்டுள்ளனர். அவர்களுக்கு வாக்களி- ப்பதன் மூலம் தேவையற்ற இனவாதக் கருத்துக்களைத் தவிர்க்க முடியும்.

தற்போதைய நிலையில் ரணிலோ, சஜித்தோ, அநுரவோ மூவரில் யார் வந்தாலும் தமிழர்கள் ஐக்கிய இலங் கைக்குள் அரசியல் தீர்வுக்காக பேரம் பேசும் நிலைமை காணப்படுகின்றது.

தமிழ்ப் பொது வேட்பாளர் என்பது கூட்டு முயற்சி என்பதை விட கூட்டு களவு என்றே சொல்லலாம். எந்தவொரு அரசியல் கட்சியும் தமது பணக்கொடுக் கல் வாங்கல்களை வெளிப்படையாக வைக்க வேண்டும்.

ஜனநாயகம், வெளிப்படைத் தன்மை என பேசுபவர்கள் அதனை செய்ய வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகள் அவ்வாறு செயற்பட முடியாது. அவர்கள் ஆயுத இயக்கம். மில்லியன் கணக்கில் ஆயுதம் வாங்கினோம் என கணக்கு காட்டமுடியாது.

வெளிப்படையாக ஜனநாயக அரசி யல் செய்பவர்கள் மற்றும் தமிழ் மக்க ளின் பிரச்சினையை சர்வதேசத்துக்கு காட்ட வேண்டும் என்பவர்கள் தமது கணக்கு விடயத்தில் பலவீனமாக இருக்கிறார்கள். அது பாரிய மோசடி என நான் நம்புகிறேன்.

விடுதலைப் புலிகள் இருக்கும்போது இலங்கை அரசாங்கத்தை வெல்வோம் என்ற நம்பிக்கை இருந்தது. சரி, தவ றுக்கு அப்பால் இராணுவ கட்டமைப்பை வைத்திருந்தனர்.

ஆனால் இவர்களுக்கு எதுவும் கிடை யாது. விடுதலைப் புலிகளின் நிறங்க ளான சிவப்பு மஞ்சளை பயன்படுத்தி, சிறுவர்கள் மற்றும் இளையோரைப் பயன்படுத்தி, உணர்ச்சியைத் தூண்டி, தற்கொலைக்கு அனுப்ப செயற்படு கிறார்கள் – என்றார்.

# இன்று வாகன விபத்தில் பாடசாலை மாணவி பலி!

## மாவடிப்பள்ளியில் சோகச் சம்பவம்

**(வி.ரி.சகாதேவராஜா)**

சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியில் தரம் 9 பயிலும் 14 வயது மாணவி வாகன விபத்தில் பரிதாப கரமாக பலியானார்.

இச்சம்பவம் இன்று புதன்கிழமை காலை காரைதீவு பொலீஸ் பிரிவுக் குட்பட்ட மாவடிப்பள்ளியில் சம்பவித் துள்ளது.

அம்பாறை – கல்முனை வீதியில் மாவடிப்பள்ளி பெரியபள்ளி வாசலுக்கு முன்பாக இன்று புதன்கிழமை காலை 08.15 மணியளவில் நடைபெற்ற வாகன விபத்தில் 14 வயது சிறுமி அந்த இடத் திலேயே மரணமடைந்துள்ளார்.

இவர் சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனையில் விசேட கல்விக்கு பொறுப் பான ஆசிரிய ஆலோசகர் அகமட்லெவ் வையின் புதல்வியாவார்.

மோட்டார் சைக்கிளில் தந்தையுடன் பயணித்துக் கொண்டிருந்த மாணவி யின் மீது தனியார் போக்குவரத்து பஸ் ஒன்று மோதியதிலேயே இந்த விபத்து இடம் பெற்றுள்ளதாகத் தெரிகிறது.

சம்மாந்துறையை சேர்ந்த மாணவி இவ்வாறு விபத்தில் மரணமடைந்த செய்தி காட்டுத் தீ போல் பரவியது. சம்மாந்துறை சோகமயமாக உள் ளது.

இந்த விபத்து நடந்தவுடன் பஸ்ஸின் சாரதி விபத்து நடந்த இடத்திலிருந்து தப்பி ஓடியுள்ளார் என்றும் இந்நிலை யில் தற்போது பஸ் சாரதி காரைதீவு பொலிஸில் சரணடைந்துள்ளார் என்றும் தெரிகிறது.

காரைதீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரு கின்றனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அநுரா வென்றால்...!

இந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறக்கூடிய மூன்று தரப்புகளில் ஒன்றாக எதிர்வு கூறப்படுவது தேசிய மக்கள் சக்தியாகும்.

அதன் வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்க இந்த முறை தேர்தலில் வென்றால், ஆட்சி அதிகாரத்தை சிவப்பு அணி பெறுவது இதுதான் இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக இருக்கும்.

ஆட்சிக்கு வந்ததும் அக்கட்சி எப்படி செயல்படும் என்பதை கண்டறிவதற்காக அதன் ஆரம்ப நடவடிக்கைகள் உன்னிப்பாகக் கவனிக்கப்படும்.

தேர்தலில் தங்களின் கட்சி வென்றதும் என்ன செய்யும், எத்தகைய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்கவும் தேசிய மக்கள் சக்தியின் முன்னணிப் பிரமுகர்களும் அவ்வப்போது வெளியிட்டு, பகிரங்கப்படுத்தி வருகின்றனர். அவை நோக்கற்பாலவை.

அந்த வகையில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான கலாநிதி ஹரிணி அமரசூரிய அம்மையார் சுட்டும் கருத்துக்கள் கவனிக்கத்தக்கவை.

''இந்தத் தேர்தலில் எங்கள் கட்சிக்கு மக்கள் ஆணை கிடைக்குமானால் அந்த ஆணை இப்போதைய நாடாளுமன்றத்துக்கு எதிரான ஆணையாகவே கருதப்படும். ஆகவே எமது வேட்பாளர் ஜனாதிபதி பதவிக்கு - அதிகாரத்துக்கு - வந்ததும் இந்த நாடாளுமன்றத்தை இயன்ற விரைவில் கலைக்க நடவடிக்கை எடுப்பார்'' - என்று விளக்குகின்றார் அவர்.

அக்கட்சியின் வேட்பாளர்கள் மற்றும் ஏனைய தலைவர்கள் கூறுவது போன்று அநுரகுமார ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் அடுத்த கணம் நாடாளுமன்றம் கலைக்கப்படும் என ஹரிணி அமரசூரிய கூறவில்லை. கற்றறிந்தவர் அல்லவா? அரசமைப்பு ஏற்பாடுகள் புரிந்து, நிலைமைகளை விவரிக்கின்றார்.

அநுரகுமார ஜனாதிபதியானால் வெற்றிடமாகும் அவரது நாடாளுமன்ற உறுப்பினரின் இடத்துக்கு தமது கட்சியின் அடுத்த நிலையில் இருப்பவர் எம்.பியாவது அதன் பின்னரான காபந்து அரசுக்கு அவசியம் என்பதை புரிந்தமையால், அப்படி அடுத்தவர் எம்.பியாக நியமனமாவதற்கான கால அவகாசம் வரை நாடாளுமன்றக் கலைப்புத் தொடர்பில் பொறுமை காக்க வேண்டியது கட்டாயம் என்பது ஹரிணி அமரசூரியவுக்குப் புரிகின்றது.

தமது வேட்பாளர் ஜனாதிபதியானால், நாடாளுமன்றத்தைக் கலைத்து காபந்து அரசு மூலம் அடுத்த தேர்தல் வரை சுமார் 2 மாத காலத்துக்கு நாட்டை நிர்வகிப்பது குறித்து மூன்று மார்க்கங்கள் உள்ளன என்கிறார் அவர்.

ஒன்று - தேசிய மக்கள் சக்தியின் மூன்று உறுப்பினர்கள் மற்றும் ஜனாதிபதியுடன் மிகச் சிறிய அமைச்சரவையை ஏற்படுத்தல். அத்தகைய சூழலில் பெண்மணியான ஹரிணி அமரசூரியவே பிரதமராக வரக்கூடும்.

அடுத்தது - அமைச்சர் பணிகளைத் ஜனாதிபதி தாமே நேரடியாக அமைச்சுச் செயலாளர்களை நியமித்துக் கையாளலாம்.

மூன்றாவது - தேசிய மக்கள் சக்தி அல்லாத தரப்புகளை இணைத்து ஒரு காபந்து அமைச்சரவையை நிறுவலாம். இது பெரும்பாலும் சாத்தியமற்றது.

-இப்படித்தகவல்வெளியிடுகின்றார் தேசிய மக்கள் சக்தியின் பேச்சாளரான ஹரிணி அமரசூரிய.

இவையெல்லாம் அநுரகுமார திஸநாயக்க இந்தத் தேர்தலில் வென்று ஜனாதிபதியானால் மட்டுமே நடக்கக்கூடிய காரியங்கள்...!



# இதுவரை ஆட்சிசெய்த ஜனாதிபதிகள் தமிழர்களை ஏமாற்றியதே வரலாறு?

## திராய்க்கேணியில் ஜெயசிறில் காட்டம்

(வி.ரி.சகாதேவராஜா)

கடந்த காலங்களில் இருந்த எட்டு ஜனாதிபதிகளுக்கும் வாக்கு போட்டு தமிழர்கள் கண்ட பலன் என்ன? எட்டு ஜனாதிபதிகளும் தமிழ் மக்களை ஏமாற்றினார்கள். இதுவே வரலாறு.

இவ்வாறு தாயக செயலணியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளரும் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார்.

திராய்க்கேணியில் நேற்று மாலை இடம் பெற்ற பொது வேட்பாளர் அரியத்தை ஆதரிக்கும் பொதுக் கூட்டத்தில் பேசிய போது இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல ஒப்பந்தங்கள் கைச்சாத்திக்கப் பட்டன. பல உறுதி மொழிகள் அளிக்கப் பட்டன. ஆனால் அத்தனையும் கிழித் தெறியப்பட்டு ஏமாற்றப்பட்டதே வரலாறு.

தமிழர்கள் வாழ்கின்ற பகுதிகளில் புத்தர் சிலைகளை அமைத்து நில ஆக்கிரமிப்பு செய்கிறார்கள். அந்த வகையில் சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு வாக்கு போடத்தான் வேண்டுமா? சற்று சிந்தியுங்கள். இம்முறையாவது சர்வதேசத்துக்கு எமது ஒற்றுமையை வெளிக்காட்டும் முகமாக சங்குக்கு வாக்களிக்க வேண்டும் என்று வேண்டுகின்றேன்.– என்றார்.



# மன்னாரில் புற்று நோயை கண்டறியும் நிலையம் தொடர்பான விழிப்புணர்வு!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

'வருமுன் காப்போம்! முழுமையாக குணப்படுத்த ஆரம்ப நிலையில் கண்டறிவோம்!' எனும் தொனிப்பொருளில் சாணு நிதியத்தின் ஏற்பாட்டில் அரச அதிபர் தலைமையில் புற்று நோயை கண்டறியும் நிலையம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு நேற்று (17) செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

முன்கூட்டியே புற்று நோயை கண்டறியும் நிலையம் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் அமைக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியிலும் சரி இலங்கையிலும் சரி இறப்புகளுக்கான காரணமாக இரண்டாவதாக இடம் வகிக்கும் நோயாக புற்று நோய் காணப்படுகிறது. எனவே அதனை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து அதனை தடுப்பதன் மூலம் இறப்புகளை கட்டுப்படுத்த முடியும்.

இந்த நிலையமானது புற்றுநோய் அறிகுறி எதுவும் ஏற்பட முன்னர் ஒரு சாதாரண நோயாளிக்கு ஒரு சாதாரண மனிதருக்கு புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு இருக்கிறதா? எதிர்காலத்தில் புற்றுநோய் ஏற்படக்கூடிய வாய்ப்பு ஏதும் உள்ளதா என்பதை பற்றி கண்டறிவதற்கான அல்லது அவ்வாறான நோயாளிகளுக்கு இது வரைக்கும் ஏதாவது புற்றுநோய் ஏற்பட்டு? உள்ளதா என்பதை பற்றிய பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான ஒரு நிலையமாகும்.





இந்த நிலையம் புற்று நோயாளர்களுக்கான நிலையம் அன்றி புற்றுநோய் ஏற்படுவதற்கு முன்பு கூட்டியே அதனை ஏற்படாமல் தடுப்பதற்கு அல்லது அதன் ஆரம்ப நிலையிலேயே அதனைக் கண்டறிவதற்கான ஒரு நிலையமாகத் தொழிற்படும் நிலையமானது ஒரு வாரத்தில் 7 நாள்கள் திறந்திருக்கும்.

காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை யாழ். போதனா வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவில் இயங்கும் பொது மக்கள் தங்களுடைய புற்றுநோய் சம்பந்தமான சந்தேகங்களை குறித்த சிகிச்சை நிலையத்துக்குச் சென்று அறிந்து கொள்ளலாம்.

மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இந்த விழிப்புணர்வு இடம்பெற்றுள்ளது.





# ஐக்கிய மக்கள் சக்தியின் வட்டார தலைவர்கள் நியமனம்

(இஸட்.ஏ.றஹ்மான்)


பொத்துவில் தொகுதியிலுள்ள நிந்தவூர் பிரதேச சபைக்கான ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் வட்டார குழுக்களின் தலைவர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று மாலை நிந்தவூர் றிலக்ஸ் கார்டனில் நடைபெற்றது.

நிகழ்வின் பிரம அதிதியாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொத்துவில் தொகுதி அமைப்பாளர் எம்.ஐ.ஏ.ஆர். புஹாரி கலந்து கொண்டார்.

கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவின் வெற்றிக்கு பாடு படுவதோடு கட்சியை எதிர் காலத்தில் வலுவுள்ள அமைப்பாக மாற்றி அமைப்பது சம்பந்தமான கருத்துக்களை முன் வைத்தார்.

வட்டார குழுக்களின் தலைவர்களுக்கான நியமனக் கடிதங்களையும் வழங்கிவைத்தார்.

சஜித் பிரேமதாஸவின் மாவட்ட இணைப்பாளர் எம்.எல்.அபுல் ஹசன், நிந்தவூர் செயற்குழு தலைவர் ஏ.எல். எம்.ஜலீல் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.


Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555






## இஸ்ரேலின் இலத்திரனியல் போர்:

# ஹிஸ்புல்லாவை குறிவைத்த இஸ்ரேல்!

● ஐங்கரன் விக்கினேஸ்வரா

*(இஸ்ரேல் இலத்திரனியல் போர் முறையை நீண்ட காலமாக கொண்டிருந்தாலும், தான் ஈடுபட்டதாகக் கூறப்படும் படுகொலைகளை ஒருபோதும் உறுதிப்ப டுத்தவோ அல்லது மறுக்கவோ முயலாது.)*

மத்திய கிழக்கு மோதல்களில் ஒரு புதிய அத்தி யாயத்தை இஸ்ரேலின் இலத்திரனியல் போர் திறந் துள்ளன.

பேஜர் (Pager) சாதனங்கள் பயனருக்கான குறுகிய உரைச் செய்தியைக் காண்பிக்கும், மைய இயக்குகருவி மூலம் தொலைபேசி மூலம் அனுப்பப்படும் முறையாகும்.

மொபைல் போன்களைப் போலல்லாமல், பேஜர்கள் ரேடியோ அலைகளில் வேலை செய்கிறது. ஆபரேட்டர் ரேடியோ அலைவரிசை மூலம் செய்தியை அனுப்புகிறது.

பேஜர்களில் பயன்படுத்தப்படும் அடிப்படைத் தொழில்நுட்பம் அதன் இயற்பியல் வன்பொருளை (hardware) நம்பியிருப்பதால், அவை கண்காணிப்பது கடினமானது.

இந்தத் தாக்குதலால் ஹிஸ்புல்லா போராளிகள் மற்றும் மருத்துவர்கள் உட்பட 3,000 இற்கும் மேற் பட்டோர் காயமடைந்து, 9 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது. அவர்கள் தொடர்பு கொள்ளப் பயன்படுத்தும் பேஜர்கள் லெபனான் முழுவதும் வெடித்தன.

பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்த தகவல்படி பலர் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று தகவல் வெளியாகி இருக்கிறது.

### நிழல் உளவுத்துறை ஷின் பெட்

கடந்த காலங்களில் இஸ்ரேல் இந்த இலத்திரனியல் போர் முறையைப் பயன்படுத்தி உள்ளது. குறிப்பாக ஹமாஸின் தலைமை வெடிகுண்டு தயாரிப்பாளரான யஹ்யா அய்யாஷை 1996 இல் கொன்றதும் இவ் வகையிலேயே.

இஸ்ரேலின் ஷின் பெட் நிழல் உளவுத்துறை, அய்யாஷின் தொலைபேசியில் 15 கிராம் ஆர்டிஎக்ஸ் வெடிமருந்துகளை அடைத்து, அவர் தனது தந்தையுடன் பேசிய வேளை கொல்லப்பட்டார்.

இஸ்ரேல் இத்தகைய போர் முறையை நீண்டகாலக் கொள்கையைக் கொண்டிருந்தாலும், தான் ஈடுபட்டதாகக் கூறப்படும் படுகொலைகளை ஒரு போதும் உறுதிப் படுத்தவோ அல்லது மறுக்கவோ முயலாது.

தற்போதய தாக்குதல்களை ஹிஸ்புல்லா – லெப னான் அரசு இஸ்ரேலை நோக்கி விரலை நீட்டிய போதிலும், இந்தச் சம்பவத்துக்கு இதுவரை யாரும் பொறுப்பேற்கவில்லை. அத்துடன் இதுவரை இஸ்ரேல் இன்னமும் கருத்து தெரிவிக்கவில்லை.

### பேஜர்களின் லித்தியம் பற்றரி வெடிப்பு

பேஜர்கள் தொலைநிலை அணுகல் மூலம் லித்தியம் அயன் பற்றரிகள் அதிக வெப்பமடைந்து வெடிப்பதற்கு காரணமாக அமைந்ததுள்ளன.

லித்தியம்-அயன் பற்றரிகள் பொதுவாக நுகர்வோர் எலக்ட்ரானிக்ஸில் முறையில் பயன்படுத்தப்படுகின்றன. அவை அதிக வெப்பமடைந்து, தீ பிடிப்பதுடன் சில சந்தர்ப்பங்களில் வெடிக்கலாம்.

இது தெர்மல் ரன்அவே எனப்படும் ஒரு நிகழ்வின் காரணமாகும். பற்றரி வேகமான வெப்பநிலை மாற்றத்தை அனுபவிக்கும் போது ஏற்படும் ஒரு இர சாயன சங்கிலி எதிர்வினையாகும். இது பற்றரி அதிக வெப்பமடையும் போது, அல்லது சார்ஜ் செய்யப்ப டும்போது இவ்வாறு தூண்டப்படுகிறது.

இந்த இரசாயன எதிர்வினையின் போது அது சக்தியின் திடீர் வெளியீட்டுக்கு வழிவகுக்கும். இதனால் இந்தச் சாதனங்கள் தீவிர சக்தி மற்றும் வெப்பத்துடன் வெடிக்கும்.

இஸ்ரேல் இந்த சாதனங்களை ஹேக் செய்து, பற்றரியை ரிமோட் மூலம் அதிக சார்ஜ் செய்து, வெப்ப அலையோ தூண்டியிருக்கலாம் எனவும் கூறப்படுகிறது.

பேஜர்கள் பெரும்பாலும் மறைகுறியாக்கப்படாத தகவல் தொடர்பு சேனல்கள் மற்றும் காலாவதியான மென்பொருளைப் பயன்படுத்துகின்றனர். இதனால் அவை தாக்குதலுக்கு மிகவும் எளிதான இலக்குகளாக அமைகின்றன.

ஒன்-வே பேஜர்கள் செயலற்ற பெறுநர்களை கண்காணிக்க முடியாது. ஆனால் ஒரு செய்தி அனுப்பப்படும் போது அது அந்த பகுதியில் உள்ள ஒவ்வொரு பேஜர் டிரான்ஸ் மிட்டரையும் செயல் படுத்துகிறது.

அத்முடன் ஒளிபரப்பு சிக்னலைக் கடத்துவதன் மூலம், ஒரே நேரத்தில் நெட்வொர்க்கில் உள்ள ஒவ் வொரு பேஜரையும் தொற்றியிருக்கலாம். இந்த தீம் பொருள் தொலைவிலிருந்து தூண்டப்பட்டிருக்கலாம் அல்லது முன் திட்டமிடப்பட்ட டைமரில் செயல்படுத்தப்பட் டிருக்கலாம்.

தொடர்ச்சி▼





# ஹிஸ்புல்லாவை குறிவைத்த இஸ்ரேல்!

தொடர்ச்சி▲

இந்த சமிக்ஞை வெடிப்புக்கான தூண்டுதலாக இருந்திருக்கலாம் அல்லது வெடிக்கும் போது சாதனங்களை வைத்திருப்பதை உறுதிப்படுத்த இது பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

இந்த பேஜர் வெடிப்புகள் ஒரு சைபர் தாக்குதலின் விளைவாக இருந்தால், இது சைபர் வார்ஃபேரின் ஒரு விதிவிலக்கான அரிதான நிகழ்வாகும், இதனால் உடல் உள்கட்டமைப்புக்கு இடையூறு ஏற்படுகிறது.

**பெரிய பாதுகாப்பு மீறல்**

ஹிஸ்புல்லா அதிகாரி ஒருவர், பெயர் குறிப்பிட விரும்பாத நிலையில், பேஜர்களை வெடிக்கச் செய்தது, இஸ்ரேலுடனான கிட்டத்தட்ட ஒரு வருட போரில் “பெரிய பாதுகாப்பு மீறல்” என்று கூறினார்.

கடந்த ஒக்ரோபரில் காசா போர் வெடித்ததில் இருந்து இஸ்ரேலும் ஈரான் ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லாவும் எல்லை தாண்டிய போரில் ஈடுபட்டு வருகின்றன. இது பல ஆண்டுகளில் மிக மோசமான விரிவாக்கம் ஆகும்.

லெபனான் நாட்டில் ஹிஸ்புல்லா அமைப்பினரைக் குறி வைத்து பேஜர்களை ஒரே நேரத்தில் வெடிக்க வைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதால் 1000 இற்கும் மேற்பட்ட பேஜர்கள் ஒரே நேரத்தில் வெடித்துச் சிதறின.

**ஹிஸ்புல்லாவை குறிவைத்த இஸ்ரேல்**

இஸ்ரேலுக்கு எதிராக லெபனான் நாட்டில் இருக்கும் ஹிஸ்புல்லா அமைப்பினரும் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் அவர்களைக் குறி வைத்துப் பேஜர்களை வெடிக்க வைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டதால் சர்வதேசம் எங்கும் பரபரப்பு எழுந்திருக்கிறது.

லெபனான் நாட்டில் இருக்கும் ஹிஸ்புல்லா அமைப்பினர் இஸ்ரேலுக்கு எதிராக போராடி வரும் நிலையில் அவர்களது செல்போன்கள் உள்ளிட்டவை ஒட்டு கேட்பதால், அவர்கள் தங்கள் தகவல்களை பரிமாறிக் கொள்வதற்காக பேஜர்களை பயன்படுத்தி வருகின்றனர்.

மொபைல் போன் பயன்படுத்தும் போது இஸ்ரேல் உளவு பார்க்கலாம் என்பதன் காரணமாகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. தற்போது பேஜர்களை வைத்தே தாக்குதல் நடத்தி இருப்பதாக இஸ்ரேல் மீது குற்றச்சாட்டு முன் வைக்கப்படுகிறது.

**அடுத்தடுத்து பேஜர் வெடிப்பு**

பெய்ரூட் நேரப்படி மூன்று முப்பது மணி அளவில் அடுத்தடுத்து பேஜர் வெடிப்புகள் நிகழ்ந்தன என்று தகவல் வெளியாகியிருக்கிறது. மேலும் பெய்ரூட்டின் புறநகர் பகுதிகளிலும் ஹிஸ்புல்லா அமைப்பினர் வைத்திருந்த பேஜர்கள் தொடர்ந்து வெடித்துச் சிதறின. லெபனான் மட்டுமல்லாது அந்த நாட்டுக்கு வெளியேயும் பேஜர் வெடிப்பு நிகழ்ந்ததாக கூறப்படுகிறது.

கடந்த ஒக்ரோபர் முதல் ஹிஸ்புல்லா அமைப்பினர் இஸ்ரேலுடன் மோதல் போக்கை கையாண்டு வரும் நிலையில் வெடிப்பு சம்பவம் மிகப்பெரிய பாதுகாப்பு விதி மீறல் என குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

**ஒரு மணி நேர குண்டுவெடிப்பு அலை**

ஹிஸ்புல்லாவின் கோட்டையான தலைநகர் பெய்ரூட்டிலும், லெபனானின் தெற்கிலும் பேஜர் சாதனங்கள் வெடித்ததாக பாதுகாப்பு வட்டாரம் தெரிவித்துள்ளது. சுமார் ஒரு மணி நேரம் நீடித்தது. பேஜர் சாதனங்கள் எவ்வாறு வெடித்தன என்பது உடனடியாகத் தெரியவில்லை.

**ஈரான் தூதுவர் காயம்**

மேலும் இந்த பேஜர் வெடிப்பில் ஈரான் தூதர் முஜிதாபா அமானி என்பவர் காயமடைந்ததாகவும், லெபனான் நாடாளுமன்றத்தின் ஹிஸ்புல்லா பிரதிநிதியான அலி அமாவின் மகன் கொல்லப்பட்டதாகவும் தகவல் வெளியாகி இருக்கிறது.

சைபர் தாக்குதல் காரணமாக பேஜர்களின் லித்தியம் அயன் பேட்டரிகள் அதிக வெப்பமடைந்து வெடித்து சிதறியதாகக் கூறப்படுகிறது.

ஹிஸ்புல்லா இது தொடர்பாக விரிவான விசாரணைக்கு உத்தரவிட்டுள்ள நிலையில், இஸ்ரேல் இது தொடர்பாக எவ்வித விளக்கமும் அளிக்கவில்லை.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், ஹிஸ்புல்லாவின் தலைவர் ஹசன் நஸ்ரல்லா தனது அமைப்பின் உறுப்பினர்களை முக்கியமான தகவல் தொடர்புகளுக்கு பேஜர்களைப் பயன்படுத்துவதைத் திரும்பப் பெறுமாறு வலியுறுத்தினார். நவீன ஸ்மார்ட்போன்கள் இஸ்ரேலிய படைகளின் சைபர் தாக்குதல்களுக்கு மிகவும் எளிதில் வசப்படும் என்று நியாயப்படுத்தினார்.






# வாக்கெண்ணும் நிலையமான மட்டு இந்து; முன்னாயத்தச் செயற்பாட்டில் அரச அதிபர்!

(பழுவூரான்)

ஒன்பதாவது ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்ததுக்கான ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக வாக்கெண்ணும் நிலையமான மட்டக்களப்பு இந்துக் கல்லூரி தயார்ப்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த ஒழுங்கமைப்புக்கள் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரும் அரச அதிபருமாகிய திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை (17) கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்தக் கள ஆய்வில் மண்டப ஒழுங்குகள், போக்குவரத்து, பொது வசதிகள், நலனோன்பு வசதிகள், மின்சார வசதிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் போன்ற விடயங்கள் ஆய்வு செய்யப்பட்டன. எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்து ரையாடப்பட்டுததீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

இக் கள விஜயத்தின் போது மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எம்.பீ.எம்.சுபியான் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.



# அம்பாறையில் பகலிலும் நடமாடும் யானைகளால் மக்கள் அசௌகரியம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்தின் பல இடங்களிலும் பகலிலும் நடமாடும் யானைகளால் பொது மக்களுக்கு அசௌகரியம் அடைந்து வருகின்றனர்.

எந்த நேரமும் எதுவும் நடக்கலாம் என்று உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு மக்கள் வீதியில் பயணிக்கின்றனர்.

அம்பாறை மாவட்டத்தின் காரைதீவு, நிந்தவூர் மற்றும் சம்மாந்துறை பிரதேசங்களில் மாலையிலும் இரவு வேளையிலும் மக்களுக்கு தொல்லை கொடுத்து வந்த யானைகள் தற்போது பகல் வேளையிலும் மக்கள் நடமாட்டமுள்ள இடங்களுக்கு சர்வ சாதாரணமாக நடமாட ஆரம்பித்துள்ளன.

கூட்டமாகவும் தனியாகவும் கிராமங்களுக்குள் உட்புகும் யானைகள் குடியிருப்புகள், மதில்கள் மற்றும் பயன்தரும் தென்னை, வாழை மரங்களுக்கும் பலத்த சேதத்தை உண்டு பண்ணுகின்றன.

அண்மைக் காலமாக யானையின் தாக்கத்தால் இந்தப் பிரதேசங்களில் பல உயிர்களும் காவு கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# 19 வயது பெண்கள் கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவுக்குப் பயணமானது

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கையின் 19 வயது பெண்கள் கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியா பயணமானது.

ஆஸ்திரேலியாவில் இடம்பெறவுள்ள 19 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான சர்வதேச முக்கோண கிரிக்கெட் தொடரில் கலந்து கொள்வதற்கான இலங்கை கிரிக்கெட் அணி இலங்கையிலிருந்து புறப்பட்டுச் சென்றது.

சர்வமத ஆசியுடன் விடைபெற்றுச் சென்ற கிரிக்கெட் குழாமில் அம்பாறை மாவட்ட கிராமப்புற உகன தேசிய பாடசாலை மாணவி பிரமுதி மெத்சராவும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.







# சஜித் பிரேமதஸவை ஆதரித்து முஸ்லிம் காங்கிரஸ் பிரசாரம்

(மாளிகைக்காடு)

ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளரும், எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாஸவை ஆதரித்து ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாளிகைக்காடு கிழக்கு வட்டார உள்ளூராட்சி மன்ற வேட்பாளர் எம்.எச். நாசர் தலைமையில் பிரசார கூட்டம் நேற்று (17) மாளிகைக்காடு பிரதேசத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஶ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ், ஶ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான நாடாளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம், ஶ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தலைவரும், முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், கட்சியின் பிரதித் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஐ.எம்.மன்சூர், பிரதி தேசிய அமைப்பாளரும், கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சருமான எம்.எஸ் உதுமாலெப்பை, கட்சியின் உச்ச பீட உறுப்பினரும், அம்பாறை மாவட்ட செயற்குழுவின் செயலாளருமான ஏ.சீ.சமால்டீன், கல்முனை மாநகர சபை முன்னாள் மேயரும், உச்ச பீட உறுப்பினருமான கலாநிதி சிராஸ் மீராசாகிப், மாளிகைக்காடு அமைப்பாளர் எம்.எச்.எம். இஸ்மாயில், மாளிகைக்காடு மத்தி தலைவர் ஏ.எல்.இம்தியாஸ் மற்றும் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

# தேசிய அரசியல் நீரோட்டத்தில் பயணிப்பதன் மூலமே முஸ்லிம்களின் உரிமைகளை வெற்றிகொள்ள முடியும்

## ஜனாதிபதியின் கல்முனைத் தொகுதி ஒருங்கிணைப்பாளர் ஏ.எம்.ஜெமீல் தெரிவிப்பு

**(சாய்ந்தமருது)**

முஸ்லிம் சமூகத்தில் புரையோடிப் போயுள்ள போலித் தலைமைகளை புறமொதுக்கி விட்டு தேசிய அரசியல் நீரோட்டத்தில் பயணிப்பதன் மூலமே முஸ்லிம்கள் தமது உரிமைகளையும் அபிலாஷைகளையும் வென்றெடுக்க முடியும்.

இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கல்முனைத் தொகுதிக்கான அதிகாரமளிக்கப்பட்ட ஒருங்கிணைப்பாளரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் குழுத் தலைவருமான கலாநிதி ஏ.எம். ஜெமீல் தெரிவித்துள்ளார்.

சாய்ந்தமருது அல்ஹிலால் வீதியில் அமைந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கல்முனைத் தொகுதிக்கான தேர்தல் ஒருங்கிணைப்பு அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் தலைமை வகித்துப் பேசுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,



தமது சுயநல அரசியலுக்காகவே இரண்டு முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களும் சமூக நலன் கருதிய கோரிக்கைகளை முன்வைக்காமல், நிபந்தனை எதுமின்றி சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கின்றனர். இதனால் முஸ்லிம் சமூகத்துக்கோ நாட்டுக்கோ எவ்வித நன்மையுமில்லை.

இத்தலைமைகளின் சித்துமாத்து விளையாட்டுக்களை இளைஞர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இவர்களின் பிடியிலிருந்து சமூகத்தை பாதுகாப்பதற்கு இளைஞர்கள் எம்முடன் இணைந்து தேசிய அரசியலில் பயணிக்க முன்வர வேண்டும். இனவாதம் பேசிப்பேசி எமது சமூகத்தை இன்னுமின்னும் படுகுழியில் தள்ளுவதற்கு இடமளிக்கக் கூடாது. பேரினவாத சக்திகளிடம் இருந்து முஸ்லிம் சமூகம் பாதுகாக்கப்பட வேண்டுமாயின் எமது இளைஞர்களை உசுப்பேற்றும் வகையில் இனவாதக் கருத்துகளை விதைக்கின்ற தலைமைகளை நாம் முதலில் நிராகரிக்க வேண்டும்.

இந்த ஜனாதிபதித் தேர்தலானது எமது தேசத்தினதும் மக்களினதும் எதிர்கால சந்ததியினரதும் தலைவிதியை தீர்மானிக்கப் போகின்ற முக்கியமான தேர்தலாகும்.

முஸ்லிம் சமூகமானது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்த ஆட்சியில் இனவாத நெருக்குவாரங்கள் எவையுமின்றி சமத்துவத்துடன் நிம்மதியாக வாழ்கின்ற இந்த பொற்காலம் நீடிக்க வேண்டுமா அல்லது இன ரீதியாக நசுக்கப்படுகின்ற ஒரு யுகம் மீண்டும் உருவாக வேண்டுமா என்பதைச் சிந்திக்க வேண்டும். – என்றார்.




# சஜித் பிரேமதாஸவை ஆதரித்துப் பிரசாரம்

**(எம்.என்.எம்.அப்ராஸ்)**

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேம தாஸவை ஆதரித்து கல்முனையில் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் இடம்பெற்றன.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமின் வழிகாட்டலில் முன்னாள் கல்முனை மாநகர பிரதி முதல்வரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொருளாளருமான ரஹ்மத் மன்சூர் தலைமையில் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

கல்முனை பிரதான உள்ளக வீதிகள் மற்றும் வீட்டுக்கு



வீடு சென்று பிரசார நடவடிக்கைகள் நேற்று முன்தினம் (16) இடம்பெற்றன. இந்தப் பிரசார நடவடிக்கையின் போது கட்சியின் முக் கியஸ்தர்கள் மற்றும் இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

# வீழ்ச்சியடைந்த நாட்டைக் கட்டி எழுப்பிய ஜனாதிபதி ரணிலுக்கு வாக்களிப்போம்!

## அதாவுல்லா எம்.பி. தெரிவிப்பு

(எம். எப். நவாஸ்)

வீழ்ச்சியடைந்த நாட்டைக் கட்டி எழுப்பிய ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கு வாக்களிப்போம் என்று தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ. எல்.எம்.அதாவுல்லா தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொத்து வில் தொகுதி அமைப்பாளர் லொயிட்ஸ் ஆதம்லெப்பை தலைமையில் அட்டா ளைச்சேனை பிரதான வீதியில் ரணில் விக்ரமசிங்கவை ஆதரித்து நேற்றுப் பிரச்சாரம் இடம்பெற்றது.

இதன்போது அவர் இவ்வாறு தெரி வித்தார்.

நாட்டைப் பற்றிச் சிந்தித்து நன்றிக் கடனாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங் கவுக்கு வாக்களிப்பது நமது கடமையாகும். கட்சிக்காக மக்கள் அல்ல. மக்களுக்காகவே கட்சி இருக்க வேண்டும். ரவுப் ஹக்கீம் மக்களை ஏமாற்றுவதை ஒருபோதும் அங்கீகரிக்க முடியாது என்று மேலும் தெரிவித்தார்.

இந்தப் பிரச்சாரக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். எம்.முசாரப் உரையாற்றும்போது,

கோட்டபாய ராஜபக்ஸவுடன் இருந்து இனவாதத்தை விதைத்த அணி இன்று சஜித்துடன் இணைந்து கொண்டு செயற்படுகின்றது. ஜனாஸா எரிப்பு விடயத்திலும், பசளை விடயத்திலும் கோட்டபாயவை பிழையாக வழி நடத்திய அணியை சஜித்துடன் நல்லதொரு அணி உள்ளதாக முஸ்லிம் தலை மைகள் மேடை மேடையாக பேசி வரு கின்றார்கள். எனவே, இனவாதிக ளின் கூடாரமாக உள்ள அணியைத் தோற் கடித்து ரணில் விக்ரமசிங்கவை வெல்ல வைக்க வேண்டும் என்றார்.

பொத்துவில் தொகுதி அமைப்பாளர் லொயிட்ஸ் ஆதம்லெப்பை, நாடாளு மன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முசாரப்பின் இணைப்பாளர் எஸ்.எம். அறூஸ் உள்ளிட்ட பலரும் உரையாற் றினர்.

இப்பிரச்சாரக் கூட்டத்தில் அட்டா ளைச்சேனை பிரதேச சபையின் முன் னாள் உறுப்பினர் தமீம் ஆப்தீன், தேசிய காங்கிரஸ் கட்சியின் உயர்பீட உறுப் பினர் பாயிஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.




# இன்று சம்மாந்துறையில் நடந்த மாவட்டமட்ட ஆங்கில தினப் போட்டி

(வி.ரி. சகாதேவராஜா)

மாவட்ட மட்ட ஆங்கில தினப் போட்டி இன்று (18) புதன்கிழமை சம்மாந்துறை அல்-மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூ ரியில் நடைபெற்றது.

சம்மாந்துறை கல்வி வலயம் ஏற்பாடு செய்த மாவட்ட மட்ட போட்டி களின் அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் செபமாலை மகேந் திரகுமார் கலந்து கொண்டார்.

சிறப்பு அதிதிகளாகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான திருமதி நிலோ பரா, பி. பரமதயாளன், எச் . நைரூஸ்கான்,எம்.சியாட், ஏ.பார்த்தீபன், ஏ.றியாசா, எம்.நௌபர்டீன் , உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள், வளவாளர்கள், ஆசிரியர்கள், அதிகாரி கள் கலந்து கொண்டனர்.



கல்முனை, சம்மாந்துறை, அக் கரைப்பற்று, திருக்கோவில் ஆகிய நான்கு வலயங்களைச் சேர்ந்த மாண வர்கள் பங்கேற்ற நிகழ்வில் ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப் பாளர் ஏ .நசீர் வரவேற்புரை நிகழ்த்த வளவாளர் கே.குணரத்ன விளக்க உரை நிகழ்த் தினார். தொடர்ந்து எழுத் தாக்கம் மற்றும் நாடக போட்டிகள் இடம் பெற்றன. போட்டி களில் வெற்றிபெற் றோருக்கான பரிசில் வழங்கலும் இடம்பெற்றது.




# ஜம்மு - காஷ்மீரில் இன்று சட்ட சபைத் தேர்தல்

# வாக்குப் பதிவு!

ஜம்மு-காஷ்மீர் பகுதியில் இன்று முதற்கட்ட சட்ட சபைத் தேர்தல் நடைபெற்றுவருகின்றது.

காஷ்மீரில் 2014ம் ஆண்டு சட்டசபை தேர்தல் நடைபெற்றது. தேர்தலுக்கு பின்னர் மெகபூபா முப்தி தலைமையிலான மக்கள் ஜனநாயக கட்சி - பா.ஜ.க. கூட்டணி ஆட்சி அமைத்தது.

ஆனால், 2018ஆம் ஆண்டு கூட்டணியில் இருந்து பா.ஜ.க. விலகியதையடுத்து ஜம்மு-காஷ்மீரில் ஆளுநர் ஆட்சி அமுலுக்கு வந்தது. பின்னர், 2019ஆம் ஆண்டு ஜம்மு-காஷ்மீருக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பு அந்தஸ்தை மத்திய அரசு ரத்து செய்தது. மேலும், அந்த மாநிலத்தை ஜம்மு-காஷ்மீர், லடாக் என இரண்டு யூனியன் பிரதேசங்களாகப் பிரித்தது.

ஜம்மு-காஷ்மீர் சட்டசபையுடன் கூடிய யூனியன் பிரதேசமாகவும், லடாக் சட்டசபை இல்லாத யூனியன் பிரதேசமாகவும் பிரிக்கப்பட்டது.

இதனிடையே ஜம்மு-காஷ்மீரில் 2024 செப்டெம்பருக்குள் தேர்தல் நடத்த வேண்டுமென உச்ச நீதிமன்றம் விடுத்த உத்தரவிட்டதையடுத்து தேர்தல் திகதியை தேர்தல் ஆணையம் அறிவித்தது.

அதன்படி, ஜம்மு-காஷ்மீரில் மொத்தமுள்ள 90 தொகுதிகளுக்கும் 3 கட்டமாக தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. முதற்கட்டத் தேர்தலில் 24 தொகுதிகளுக்கும் 2ஆம் கட்ட தேர்தலில் 26 தொகுதிகளுக்கும், 3ஆம் கட்ட தேர்தலில் 40 தொகுதிகளுக்கும் தேர்தல் நடைபெற உள்ளது.

இந்நிலையில், ஜம்மு-காஷ்மீரில் 24 தொகுதிகளுக்கான முதற்கட்ட தேர்தல் இன்று நடைபெற்று வருகிறது. ஜம்முவில் 8 தொகுதிகளுக்கும் காஷ்மீரில் 16 தொகுதிகளுக்கும் தேர்தல் நடைபெற்று வருகிறது.

முதற்கட்ட தேர்தலில் 23 லட்சத்து 27 ஆயிரத்து 580 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இதில் 11 லட்சத்து 76 ஆயிரத்து 462 பேர் ஆண்கள், 11 லட்சத்து 51 ஆயிரத்து 58 பேர் பெண்கள், 60 பேர் மூன்றாம் பாலினத்தவர்கள் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

3 ஆயிரத்து 276 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு தேர்தல் மும்முரமாக நடைபெற்று வருகிறது.

காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கிய நிலையில் மக்கள் நீண்ட வரிசையில் நின்று வாக்களித்து வருகின்றனர். மதியம் ஒரு மணி வாக்குப்பதிவு நிலவரப்படி 41.17 சதவீத வாக்குகள் பதிவாகியிருந்தன.

கிஷ்த்வாரில் உள்ள பக்வான் மொஹல்லாவில் உள்ள வாக்குச்சாவடியில் வாக்காளர்களை அடையாளம் காண்பது தொடர்பாக நடைபெற்ற போராட்டத்தைத் தொடர்ந்து வாக்குப் பதிவு சிறிது நேரம் நிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# மக்களுக்கு காட்டு யானை இறைச்சி!

## கடும் உணவுப் பஞ்சம் போக்க 200 யானைகளைக் கொன்று உணவாக வழங்க சிம்பாப்பே முடிவு



சிம்பாப்வேயில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டுள்ளமையால், 200 காட்டு யானைகளைக் கொன்று, அதன் இறைச்சியை மக்களுக்கு விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்க தேசங்களில் வரலாறு காணாத வறட்சி நிலவி வருகிறது. அந்த நாடுகளின் தரவுப்படி கடந்த 40 ஆண்டுகளில் இந்த மாதிரியான வறட்சியை எதிர்கொண்டது இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் உணவுப் பஞ்சத்தை எதிர்கொண்டுள்ள மக்களுக்கு உதவும் வகையில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் சுமார் 700 வன உயிரினங்களைக் கொல்ல உள்ளதாக நமீபியா அறிவித்தது. இதில் 83 யானைகளும் அடங்கும்.

இந்நிலையில், நமீபியாவைத் தொடர்ந்து சிம்பாப்வேயிலும் யானைகளைக் கொன்று மக்களுக்கு உணவாக வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. சிம்பாப்வேயில் கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத வகையில் கடும் வறட்சி வாட்டி வதைத்து வருகின்றது. கடந்த ஆண்டு மாத்திரம் 50 யானைகள் கொல்லப்பட்ட நிலையில், தற்போது 200 காட்டு யானைகளைக் கொன்று, அதன் இறைச்சியை மக்களுக்கு விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கனடா முரசு

பக்கங்கள் 05

புதன்கிழமை 18/09/2024

## கனடாவின் பணவீக்கம் 2 வீதமாகக் குறைந்தது

ஒன்றாரியோ, செப்ரம்பர் 18

கனடாவின் பணவீக்கம் ஓகஸ்ட் மாதத்தில் 2 சதவீதமாக குறைந்தது.

பெப்ரவரி 2021க்குப் பின்னர் மிகக் குறைந்த பணவீக்க 02



# பிரதமர் ட்ரூடோவுக்கு சில மாதங்களில் இரண்டாவது இடைத்தேர்தல் தோல்வி!

ஒன்றாரியோ, செப்ரம்பர் 18

சில மாதங்களில் இரண்டாவது இடைத்தேர்தல் தோல்வியை பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ எதிர்கொண்டார்.

திங்கட்கிழமை நடைபெற்ற இரண்டு தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில் அவரின் லிபரல் கட்சி வெற்றி எதையும் பெறவில்லை.

தற்போதைய சிறுபான்மை நாடாளு மன்றத்தில் அதிகார சமநிலையை வைத் திருக்கும் கட்சிகள் இந்த இடைத்தேர்தலில் தலா ஒரு ஆசனத்ததை வென்றன. 02



# பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் ஆட்சி; கனடியர்கள் சலித்துப் போய் விரக்தி!

ஒன்றாரியோ, செப்ரம்பர் 18

கனடியர்கள் ஜஸ்டின் ட்ரூடோவால் விரக்தி அடைந்திருக்கின்றனர் எனப் புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் ஜக்மீத் சிங் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் இலையுதிர் கால கூட்டத்தின் முதல் நாளில் செய்தியாளர்களிடம் உரையாடிய போது ஜக்மீத் சிங் இந்தக் கருத்தை தெரிவித்தார்.

ஜஸ்டின் ட்ரூடோ அரசாங்கத்துடன் செய்து கொண்ட நம்பிக்கை ஒப்பந்தத்தில் இருந்து புதிய ஜனநாயகக் கட்சி அண்மையில் விலகிய நிலையில் இந்தக் கருத்தை ஜக்மீத் சிங் கூறினார்

ஜஸ்டின் ட்ரூடோவால் சலித்துப் போய் விரக்தி அடைந்திருக் 02



# 2 ஆவது இடைத்தேர்தல் தோல்வியின் பின்னரும் ஆட்சியிலேயே தமது கவனம் என்கிறார் பிரதமர்!

ஒன்றாரியோ, செப்ரம்பர் 18

தாம் ஆட்சியில் கவனம் செலுத்த உள்ளார் எனப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

இரண்டாவது இடைத்தேர்தல் தோல்வியை எதிர்கொண்ட நிலையில் இந்தக் கருத்தை பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ நேற்று தெரிவித்தார்.

திங்கட்கிழமை நடைபெற்ற இரண்டு தொகுதிகளுக்கான இடைத் தேர்தலில் லிபரல் கட்சி வெற்றி எதையும் பெறவில்லை.

இந்த நிலையில் ஆட்சியில் 'கவனம் செலுத்தப் போகிறேன்' என பிரதமர் ஊடகவியலாளர்களிடம் கூறினார்.

மீண்டும் ஒரு இடைத் தேர்தலில் தோல்வி அடையும் வகையில் லிபரல் கட்சிக்கு நிகழ்ந்த தவறு குறித்து 'பல பிரதிபலிப்புகள்' உள்ளன என ஜஸ்டின் ட்ரூடோ கூறினார்.

அடுத்த தேர்தலில் கனடியர்கள் செய்யக்கூடிய தேர்வு என்ன என்பதை அவர்கள் புரிந்து கொள்வதை உறுதி செய்வதில் தனது கவனம் உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

திங்கள் நடைபெற்ற இடைத்தேர்தலில் தற்போதைய சிறுபான்மை நாடாளுமன்றத்தில் அதிகார சம நிலையை வைத்திருக்கும் கட்சிகள் தலா ஓர் ஆசனங்களை வென்றுள்ளன.

நீண்ட காலம் லிபரல் வசம் இருந்த கியூபெக் மாகாணத்தின் லசால்-எமார்ட்-வெர்டுன் தொகுதியை புளொக் கியூபெக்குவா வென்றுள்ளது தெரிந்ததே.




## கனடாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அளவு இதுவாகும்.

இதன் மூலம் கனடாவின் வருடாந்த பணவீக்க விகிதம் ஓகஸ்ட் மாதத்தில் கனடிய மத்திய வங்கியின் இலக்கை எட்டியது.

இந்த அறிவித்தலின் பின்னணியில் கனடிய டொலரின் பெறுமதி பலவீனம டைந்தது.கனடிய மத்திய வங்கி அதன் வட்டி விகிதத்தை ஜூன் மாதத்தில் இருந்து தொடர்ச்சியாக மூன்று முறை குறைத் துள்ளது.

## பிரதமர் ஜஸ்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றனர் என மக்கள் மீண்டும் மீண்டும் எங்களிடம் கூறுகின்றனர் எனப் புதிய ஜனநாயகக் கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஆனால் அரசாங்கத்திற்கு எதிராக கன்சர்வேட்டிவ் கட்சி கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பது குறித்த எந்த உறுதிப்பாட்டையும் ஜக்மீத் சிங் வெளியிடவில்லை.

## பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கியூபெக் மாகாணத்தின் லசால்-எமார்ட்-வெர்டுன் தொகுதியை நீண்ட காலமாக லிபரல் கட்சி பிரதிநிதித்து வப்படுத்தியது.

திங்கள் நடைபெற்ற இடைத்தேர்தலில் இந்தத் தொகுதியை புளொக் கியூபெக்குவா கட்சி வெற்றி பெற்றது.

இந்தத் தொகுதியின் இடைத்தேர்தல் பிரதமரின் தலைமைக்கான வாக்கெடுப்பாக நோக்கப்பட்டது.

அதேவேளை மனிடோபா மாகாணத்தின் எல்ம்வூட்-டிரான்ஸ்கோனா தொகுதியை புதிய ஜனநாயகக் கட்சி வெற்றி பெற்றது.

இவற்றில் கியூபெக் மாகாணத்தின் லசால்-எமார்ட்-வெர்டுன் தொகுதி தோல்வி லிபரல் அரசாங்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைத்துள்ளது.

கோடை கால ஆரம்பத்தில் நடைபெற்ற மற்றொரு இடைத் தேர்தலில் லிபரல் கட்சியின் கோட்டையாக இருந்த சென்.போல்ஸ் தொகுதியை கன்சர்வேட்டிவ் கட்சி வெற்றி பெற்றிருந்தது.

இது ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான லிபரல் அரசாங்கத்திற்கு பெரும் பின்னடைவாக அமைந்தது.

தற்போது இரண்டாவது கோட்டையாக கருதப்படும் கியூபெக் மாகாணத்தின் லசால்-எமார்ட்-வெர்டுன் தொகுதியை இழந்த பின்னர் ஜஸ்டின் ட்ரூடோ அமைச்சரவையை சந்திக்கிறார்.




# ஒன்றாரியோ மாகாணத் தொகுதியில் இடைத்தேர்தல் நாளை மறுதினம்

ஒன்றாரியோ, செப்ரம்பர் 18

ஒன்ராரியோ மாகாண பே ஒப் குயின்டே தொகுதியில் மாகாண இடைத் தேர்தல் வாக்களிப்பு நாளை மறு தினம் வெள்ளிக்கிழமை (செப்ரம்பர் 20) நடைபெறுகிறது.

முன்னாள் மாகாணசபை உறுப்பினர் டொட் ஸ்மித் தனது பதவியில் இருந்து விலகிய நிலையில் இந்த இடைத் தேர்தல் நடைபெறுகிறது.

இந்தத் தேர்தலில் பெல்வில் தொகுதி நகர சபை உறுப்பினர்கள் இருவர் முன்னணி வேட்பாளர்களாக உள்ளனர்.

புரொக்ரசிவ் கன்சர்வேட்டிவ் கட்சியின் வேட்பாளராக டைலர் ஓல்சொப், லிபரல் கட்சியின் வேட்பாளராக சீன் கெல்லி ஆகியோர் முன்னணி வேட்பாளர்களாக இந்த இடைத் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

புதிய ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக அமென்டா ரொபர்ட்சன் போட்டியிடுகின்றார்.

இந்த இடைத் தேர்தலின் முன்கூட்டிய வாக்குப்பதிவு செப்ரம்பர் 8 ஆரம்பித்து செப்ரம்பர் 13 வரை நடந்தது.

முன்கூட்டிய வாக்குப்பதிவில் எதிர்பார்க்கப்பட்டதை போல் குறைந்த எண்ணிக்கை வாக்குப்பதிவு பதிவாகியுள்ளது.

முன்கூட்டிய வாக்குப்பதிவில் தகுதியுள்ள வாக்காளர்களில் 7,885 பேர் மாத்திரமே வாக்களித்துள்ளதாக தேர்தல்கள் ஒன்றாரியோ தெரிவிக்கிறது.













# பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டு உணவு விநியோக நபர் ஒருவர் கைது

உணவு விநியோக நபர் ஒருவர் தகாத செயலில் ஈடுபட்டார் என ஒன்றாரியோ பொலிஸார் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கடந்த வார இறுதியில் - 15 ஆம் திகதி மாலை 5 மணியளவில் - யொங் மற்றும் குறொஸ்வெனர் வீதிகளுக்கு அருகில் உள்ள தொடர்மனைக் குடியிருப்பின் லிப்டில் வைத்து ஒருவர் மீது இந்த நபர் பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ரொறன்ரோவைச் சேர்ந்த 35 வயதான அஸாஸ் அஹமட் பாப்லு என்ற நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சந்தேக நபர் மேலும் பலரை துஷ்பிரயோகம் செய்திருக்கலாம் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அதனால் சந்தேக நபரின் படம் ஒன்றை பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.




# கனடாவில் அதிர்ஷ்டலாபச் சீட்டில் தமிழருக்கு ஒரு மில்லியன் டொலர்

ஒன்றாரியோ, செப்ரம்பர் 18

தமிழர் ஒருவர் ஒரு மில்லியன் டொலர் அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பில் வெற்றி பெற்றுள்ளார்.

பிறம்டன் நகரை சேர்ந்த ஜெயக்குமார் ராஜரத்தினம் என்பவர் அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பில் இந்தப் பரிசு தொகையை வெற்றி பெற்றார்.

என்கோர் வெற்றியாளரான இவர், இந்தப் பரிசு தொகையின் மூலம் தனது வீட்டின் அடமானக் கடனைச் செலுத்தி முடிக்க முடிவு செய்துள்ளார்.

எட்டோபிகொக் நகரில் உள்ள வூட்பைன் ரேஸ்டிரக்கில் அவர் தனது வெற்றிச் சீட்டைக் கொள்வனவு செய்துள்ளார்.

20 ஆண்டுகளுக்கு மேலாக அதிர்ஷ்டலாப சீட்டுகளை கொள்வனவு செய்து வரும் இவர் ஓகஸ்ட் 14ஆம் திகதி லொட்டோ 6-49 சீட்டிழுப்பில் இந்த வெற்றியைப் பெற்றார்.

# மொடர்னா கொவிட்-19 தடுப்பூசிக்கு ஹெல்த் கனடா அங்கீகாரம். தந்தது

ஒன்றாரியோ, செப்ரம்பர் 18


புதுப்பிக்கப்பட்ட மொடர்னா கொவிட்-19 தடுப்பூசியை ஹெல்த் கனடா அங்கீகரித்துள்ளது.

இந்த புதிய தடுப்பூசி தற்போது பரவி வரும் கொவிட் மாறுபாடுகளுக்கு எதிராக பாதுகாக்கிறது என ஹெல்த் கனடா தெரிவித்தது.

ஸ்பைக்வெக்ஸ் என்ற பெயரில் அறியப்படும் இந்த தடுப்பூசி ஒமிக்ரோனின் கே.பி.2 துணை வகையை குறிவைக்கும் வகையில் மறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

இது ஒரு வருடத்திற்கு முன்னர் வெளியிடப்பட்ட தடுப்பூசியின் முந்தைய பதிப்பை மாற்றீடு செய்யும் என தெரிவிக்கப்படுகிறது.

பழைய கொவிட்-19 தடுப்பூசிகளை உபயோகிக்க வேண்டாம் என மாகாணங்கள், பிரதேசங்களை அண்மையில் ஹெல்த் கனடா கோரியிருந்தது.




இலையுதிர் காலத்தில் புதிய தடுப்பூசி பயன்படுத்தப்படுவதை உறுதி செய்யும் வகையில் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

ஹெல்த் கனடா வேறு இரண்டு புதுப்பிக்கப்பட்ட கொவிட்-19 தடுப்பூசிகளையும் மதிப்பாய்வு செய்து வருகிறது.

ஆனால் அவை இன்னமும் அங்கீகரிக்கப்படவில்லை.




# தீவிரவாத காணொலியைப் பகிர்ந்த கல்கரிவாசிக்கு ஆறு வருடச் சிறை

கனடாவில் டிக்டொக் காணொலி ஒன்றை பகிர்ந்த கல்கரியைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு ஆறு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தீவிரவாத சம்பவங்கள் தொடர்பிலான டிக்டொக் காணொலியை இந்த நபர் பகிர்ந்துள்ளார்.

ஐ.எஸ் தீவிரவாத இயக்கத்திற்கு ஆள்சேர்ப்பு செய்வது குறித்த காணொலியொன்றே இவ்வாறு பகிரப்பட்டுள்ளது.

ஸகாரியா ரைடா ஹுசெய்ன் என்ற நபரே இவ்வாறு நீதிமன்றினால் தண்டிக்கப்பட்டுள்ளார்.

ஸகாரியாவிற்கு எதிராக சுமத்தப்பட்டிருந்த நான்கு தீவிரவாத குற்றச்சாட்டுக்களில் ஒரு குற்றச்சாட்டினை அவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

தீவிரவாத இயக்கத்திற்கு ஆள் சேர்ப்பு மற்றும் குண்டு தயாரித்தல் உள்ளிட்ட காணொலிகளை சமூக ஊடகங்களின் வழியாக தாம் பகிர்ந்தமையஜ் அவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

இந்த நபர் கடந்த ஜூன் மாதம் கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

